ISSN:2582-9599



31

# பரிபாடலில் திங்களைப் போற்றுதும்

**முனைவர் இரா.இந்து**

**இணைப் பேராசிரியர், அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010**

**ஆய்வுச் சுருக்கம்**

பழந்தமிழ்ப் புலவர்களின் படைப்புகளில் வாழ்வியல் செய்திகள், வாழ்க்கை முறைமைகள், நாகரிகம், பண்பாடு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. இப்படைப்புகளுள் இலைமறைகாயாக ஆங்காங்கே அறிவியல் செய்திகளும் காணப்படுகின்றன. இதன் மூலம் இலக்கியமும், அறிவியலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதை அறிந்துக்கொள்ளலாம். இதனால் ‘அறிவியல் தமிழ்’ எனும் நான்காம் தமிழ் தோற்றுவிக்கப்பட்டது எனலாம். தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியங்களில் அறிவியல் செய்திகளும் காணப்படுகின்றன. தாவரம், விலங்கு, வேளாண்மை, மருத்துவம், வானிலை போன்ற அறிவியல் செய்திகளுள் வானியல் தொடர்பான செய்திகளைப் பற்றிய ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. எனவே, சங்க எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக அமைக்கப்பட்டதும், தொல்காப்பிய விதிப்படியும் அமைந்த தொகை நூலான பரிபாடலில் வானியல் தொடர்புடைய சந்திரன் பற்றிய செய்திகள் தமிழர் வானியல், சந்திரன் பொதுவான செய்திகள், பரிபாடலில் சந்திரன், வளர்பிறை, தேய்பிறை பற்றிய பொதுவான செய்திகள், பரிபாடலில் வளர்பிறை, தேய்பிறை தொடர்புடைய செய்திகள், சந்திர கிரகணம் பற்றிய பொதுவான செய்திகள், பரிபாடலில் சந்திர கிரகணம் பற்றிய செய்திகள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்**

பரிபாடல் கண்ணோட்டம் - தமிழர் வானியல் – சந்திரன் பற்றிய பொதுவான செய்திகள் – பரிபாடலில் சந்திரன் – வளர்பிறை, தேய்பிறை - பரிபாடலில் வளர்பிறை, தேய்பிறை- சந்திர கிரகணம் – பரிபாடலில் சந்திர கிரகணம்.

**தமிழரும் வானியலும்**

தமிழர் வானியல் தொடர்புடைய பல்வேறு உண்மைகளை உற்றுநோக்கிக் கண்டறிந்துள்ளனர். சூரியனின் (ஞாயிறு) இயக்கம், அதனைச் சூழ்ந்திருக்கும் கோல்கள், காற்று இயங்கும் திசைகள், அந்தரத்தில் இருக்கும் வானம் ஆகியவைப் பற்றிப் புறநானூறு குறிப்படுகிறது.

**செஞ் ஞாயிற்றுச் செலவும்**
**அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**
**வளி திரி தருதிசையும்**
**வறிது நிலை இயகாயமும்....　　　　(புறநானூறு.30: 1-5)**

தமிழர் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என ஒன்பது கோள்களைப் பெயர் சூட்டி அழைத்தனர்

**முன்னுரை**

சங்க நூல்களுள் பண்ணோடு அதாவது இசையோடு பாடப்பட்ட நூல் பரிபாடல் மட்டுமே. பரிபாடலில் திருமாலுக்கு 8 பாடல்களுள் 6 மட்டுமே கிடைத்துள்ளதாகவும், முருகனுக்கு 31 பாடகளுள் 8 பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளதாகவும், காளிக்கு(கொற்றவைக்கு) 1 பாடல் இருந்ததாகவும், வையைக்கு 26 பாடல்களுள் 8 மட்டுமே கிடைத்துள்ளதாகவும். மதுரைக்கு 4 பாடல்கள் இருந்ததாகவும் மொத்தம் 70 பாடல்களுள் 22 மட்டுமே கிடைத்துள்ளதாகவும் தமிழ் அறிஞர்கள் கருதுகின்றனர். அந்த 22 பாடல்களுள் முதல் மற்றும் இறுதிப் பாடல்களைப் பாடியோர் பெயர் கிடைக்கவில்லை என்றும் எஞ்சிய பாடல்களைப் பதின்மூன்று பேர் பாடியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

முதல் மற்றும் இறுதிப் பாடல்கள் தவிர பிற பாடல்களின் முடிவில் துறை, ஆசிரியர் பெயர், இசை வகுத்தோர் பெயர், பண்ணின் பெயர் பற்றிய குறிப்புகள் காணப்படுவதாகத் தமிழ் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது பரிபாடல் என்னும் பாவகையால் அமைந்த பாடல் தொகுப்பு நூல் ஆகும். பல பா வடிவங்களைப் பரிந்து (ஏற்று) வருவதால் பரிபாட்டு என்றும் பரிபாடல் என்றும் வழங்கப்படுகிறது. பரிபாடல் 'ஓங்கு பரிபாடல்' என்றும் சிறப்பிக்கப்படுகிறது. குதிரை (பரி) போல் கால்களால் பரிந்து நடைபோடும் பண்ணிசைப் பாடல்களைக் கொண்ட நூல் "பரிபாடல்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிபாடலின் சிற்றெல்லை 25 அடி என்றும் பேரெல்லை 400 அடி என்றும் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். உ.வே.சாமிநாத ஐயர் 1918 ஆம் ஆண்டு பரிபாடலின் முதற் பதிப்பினை வெளியிட்டார்.

**சந்திரன்**

சந்திரன் 'இரவின் அரசி' எனப்படுகிறது. சந்திரன் ஏறக்குறைய 3,84,000 கிலோமீட்டர் தொலைவில் புவிக்கு மிக அருகில் இருக்கிறது. இது சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுப் புவிக்கு வழங்குகிறது. சந்திரன் புவியை ஒரு குவி மையமாகக் கொண்டு நீள்வட்டப் பாதையில் பயணிக்கிறது. சூரியன், புவி ஆகியவற்றின் ஈர்ப்பு ஆற்றலால், சந்திரனின் இயக்கப் பாதை, வேகம் ஆகியவை பல மாறுதல்களுக்கு உட்படுகின்றன.

**பரிபாடலில் சந்திரன்**

பரிபாடல் ஆசிரியர் சந்திரனைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சில உவமைகளும் அடங்கும். சந்திரனின் வளர்பிறை, தேய்பிறை, கிரகணம் (eclipse) எனப்படும் மறைப்பு ஆகியவை பற்றிப் பரிபாடலில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. சூரியனின் உதயமும், மறைவும் நாட்கள் கணக்கீடுகளுக்குப் பயன்படுத்தப்படுவது போல சந்திரன் வளர்வதும் தேய்வதும் மாதங்களின் கணக்கீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**சந்திரன் – வளர்பிறை, தேய்பிறை**

அமாவாசைக்கு பின் சந்திரன் வளரும் காலம் வளர்பிறைப் பக்கம் அல்லது முற்பக்கம் எனப்படும். பௌர்ணமிக்குப் பின் சந்திரன் தேயுங்காலம் தேய்பிறைப் பக்கம் அல்லது பிற்பக்கம்

எனப்படும். இவை முறையே அலர்தரு பக்கம், வழியது பக்கம் எனப்படும். பௌர்ணமி நாள் 'நிறைமதி உவா' எனவும், அமாவாசை நாள் 'இருள் உவா' எனவும் குறிப்பிடப்படுகின்றன.

புவியிலிருந்து பார்க்குபோது சூரியனும் சந்திரனும் ஒரே திசையில் நெட்டாங்கைப் பெறும் போது சந்திரன் கண்களுக்குப் புலப்படாததால் அந்நாளை அமாவாசை அல்லது இருள் மதி நாள் என்பர். ஏறத்தாழ 15 நாள்களுக்குப் பின்னர் சூரியனும் சந்திரனும் $180^0$ நெட்டாங்கில் வேறுபடும் போது புவி இரண்டிற்கும் இடையில் இருப்பதால் அந்நாளைப் பௌர்ணமி அல்லது முழுமதி நாள் என்பர். எனவே, அடுத்தடுத்த இருள்மதிக்கோ, முழுமதிக்கோ இடைப்பட்ட காலம் சூரியவழி மாதம் என்று வரையறுக்கப்படுகிறது.

இருள் மதிக்குப் பின்னர் மூன்றாம் நாள் மேற்கு வானில் சூரியன் மறைந்தவுடன் சந்திரன் ஒரு சிறுகோடாகத் தோன்றும், இது பிறை எனப்படுகிறது.

**பரிபாடலில் வளர்பிறை, தேய்பிறை**

**ஆம்நாள் நிறை மதி அலர்தரு பக்கம்போல்**
**நாளின், நாளின், நனி வரைச் சிலம்பு தொட்டு**
**நிலவுப் பரந்தாங்கு, நீர் நிலம் பரப்பி,**
**உலகு பயம்பகர ஓம்பு பெரும் பக்கம்**
**வழியது பக்கத்து அமரர் உண்டி**
**மதி நிறைவு அழிவதின் வரவு கருங்க**
**எண்மதி நிறை உவா இருள்மதி போல (பரிபாடல்.11: 31 -37)**

இப்பாடலில் நாளின் நாள் என்பது நாளுக்கு நாள் என்பதையும், அலர்தரு பக்கம் என்பது வளரும் பிறையின் நிலையையும், பெரும் பக்கம் என்பது வளர்பக்கத்தையும், வழியது என்பது சந்திரன் தேயும் பின்பக்கத்தையும் குறிப்பிடுகிறது.

**சந்திரன், வையை ஒப்பீடு**

சந்திரன் பிறை நிலவாகத் தோன்றி வளர்பிறையின் போது படிப்படியாக ஒளிபரப்பும். அது போல மலையில் தோன்றும் வையையும் நாளுக்கு நாள் பெருகி வெள்ளமாக நிலப்பகுதிகளுள் பரவியது என்ற செய்தி பரிபாடல் குறிப்பிடப்படுள்ளது. இப்பாடலில் வையை நதிக்கு சந்திரனும், வையை வெள்ளம் நிலப்பகுதிகளுள் பரவுவதற்கு சந்திரனின் ஒளி பரவுவதும் உவமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேய்பிறையின் போது தேவர்களின் உணவாகிய சந்திரனானது, நாளுக்குநாள் தேய்ந்து போகும். அதுபோல வையையின் நீர்வரவும் சுருங்கி கொண்டே வந்தது. இருப்பினும், முழுவதும் வற்றிவிடவில்லை. பாதியளவு சந்திரனைப்போல அதன் வரவு பாதியளவுக்கே குறைந்து வந்தது. நிறைமதி எனப்படும் முழுமதி நாளுக்கு நாள் குறைவுற்று முழுவதும் தேய்ந்து அமாவாசை ஆகும்.

சந்திரன் முழுதும் தேயக்கூடிய குறைபாடு உடையது. ஆனால், வையையோ அக்குறைப்பாடு கூட அற்றது என வியக்கிறார் புலவர். இதன் மூலம் வையை ஆற்றின் நீரோட்ட நிலையினை அறியலாம்.

**சந்திர கிரகணம்**

சூரியன் சந்திரன் இவற்றை இராகு, கேது என்னும் கோள்கள் மறைப்பதால்தான் கிரகணம் உண்டாகிறது. கிரகணத்தை தமிழில் மறைப்பு என்பர். சந்திரனுடன் இராகுவோ கேதுவோ சமபாகையில் இருக்கும் போது சந்திர கிரகணம் (lunar eclipse) ஏற்படுகிறது. அதுபோல, சூரியனுடன் இராகுவோ கேதுவோ சமபாகையில் இருக்கும்போது சூரிய கிரகணம் (solar eclipse) ஏற்படுகிறது. இதையே 'கிரகணதோஷம்' என்பர். இராகு, கேது இவை சூரியனையும், சந்திரனையும் நெருங்கும் போது அக்கோள்களின் நிழல்கள் அவற்றை மறைப்பதால் புவியில் இருள் படர்கிறது. இதுவே சந்திரன் மறைப்பு அல்லது சந்திர கிரகணம் எனப்படுகிறது.

**பரிபாடலில் சந்திர கிரகணம்**

(i) முழுச் சந்திரனைப் பாம்பு விழுங்கியதாக கிரகணம் பற்றிப் பரிபாடல் கூறுகிறது. ராகுவாகிய பாம்பு, சந்திரனை மறைத்தது குறித்துப் பரிபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வில்லிற் கடை மகரம் மேவ பாம்பு ஒல்லை**
**மதியம் மறைய, வரு நாளில் - வாய்ந்த (பரிபாடல்.11: 9-10)**

சந்திரகிரகணம் முழுநிலவு அன்று தான் ஏற்படும் முழு நிலவின் போது சந்திரனுக்கும், சூரியனுக்கும் இடையில் பூமி இருக்கும். சில பௌர்ணமிகளின் போது சூரியன், பூமி, சந்திரன்ஆகிய மூன்றும் ஒரே தளத்திலும் வர நேரிடும். அப்போது பூமியின் நிழல் சரியாக சந்திரன் மீது விழும். இதனால் நிலவில் பூமியின் நிழல் பகுதி மறைக்கப்படுகிறது. சந்திரன் முழுவதும் பூமியின் நிழலால் மறைக்கப்பட்டால் முழுச் சந்திர கிரகணம் ஏற்படும்.

(ii) புதுப்புனலிடத்தே முழ்கித் திளைத்துக் களைத்த மகளிரின் அடுத்தடுத்த செயல்பாடுகளை விளக்குகையில் சந்திர கிரகணத்தை உவமையாகக் கையாண்டுள்ளர் ஆசிரியர்.

**அரவுசெறி உவவுமதியென அங்கையில் தாங்கு**
**எறி மகர வலயம் அணி திகழ நுதலியர்,**
**மதியுண் அரமகளென ஆம்பல் வாய் – மடுப்ப (பரிபாடல்10: 76 - 77)**

மகளிர் கள்ளினை வார்ப்பதற்காக கரு நிற உரையினுள் வைத்திருந்த வள்ளத்தை வெளியே எடுத்தனர். வெள்ளியாலான அக்கிண்ணங்கள் மேக மூட்டத்தைவிட்டு நீங்கிய சந்திரனைப் போல காணப்பட்டதாக ஆசிரியர் கூறுகிறார். அக்கிண்ணங்களில் கள்ளை வார்த்துத் தம் உள்ளங்கையில் மகளிர் வைத்திருந்தனர். அக்காட்சி பாம்பால் பற்றப்பட்ட முழு நிலவைப் போல இருந்ததாக ஆசிரியர் விளக்குகிறார்.

இங்கு வெள்ளிக் கிண்ணத்திற்கு சந்திரனையும் அக்கிண்ணத்தை ஏந்திய உள்ளங்கைகளுக்கு சந்திரனைச் சூழ்ந்த கேது துணைக் கோளும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

**முடிவுரை**

பரிபாடலில் பல வானியல் நுட்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சந்திரனின் வளர்பிறை, தேய்பிறை போன்ற வடிவங்களை அடையும் நிலைப் பற்றிப் பரிபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்திரன் வையை நதிக்கும் வெள்ளிக் கிண்ணத்திற்கும் உவமையாக குறிப்பிடப்பட்டுள்ளன. வளர்பிறை, தேய்பிறை ஆகியவை வையை நிதியின் நீர்ப்போக்குப் நிலபரப்பினுள் புகுவதற்கும்

பின்னர் படிப்படியாக வற்றுதலுக்கும் ஒப்பிட்டு உவமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இராகு, கேது ஆகிய நிழற்கோள்களைப் பாம்பு எனப் பழந்தமிழர் குறிப்பிட்டு வந்தனர். ஏனெனில், பாம்பு விழுங்கும் இரையின் உருவத்தைச் சிதைக்காமல் அப்படியே அதே உருவத்திலேயே வெளியேற்றும். அது போல கிரகணம் முடிந்தவுடன் சூரியன், சந்திரன் இவற்றின் உருவங்கள் மாற்றமடையாமல் இருக்கும். எனவே, இதன் மூலம் பழந்தமிழ்ப் புலவர்களின் நுண்னோக்கும் அறிவியல் பார்வையும் வெளிப்படுவதை அறியலாம். பரிபாடலில் அனைத்துப் பாடல்களும் கிடைத்தால் பல அரிய அறிவியல் செய்திகள் வெளிவரக்கூடும் எனலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. பரிபாடல்(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை, 2017.
2. அறிவியல் களஞ்சியம், தொகுதி – 4, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990.